தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 7, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஆகஸ்ட் 23, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில், காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு"

ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. என். ராமசுவாமி உடையார் அவர்கள், 22–08–2006 அன்று மறைவுற்ற செய்தியினை, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். ராமசுவாமி உடையார் அவர்கள், வாழப்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962 முதல் 1967 வரை பாராட்டத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார்கள். இனிய பண்பும், எளிமையும், அடக்கமும் கொண்டு, கட்சிப் பாகுபாடின்றி அனைத்துக் கட்சியினரிடத்திலும் நட்புணர்வோடு பழகும் இனிய பண்பாளராவார். பொது வாழ்வில் அடக்கமுடன் சீரிய முறையில் பணியாற்றியது மட்டுமின்றி, தான் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்தில் சாதாரண தொண்டராக இருந்து, பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கட்சித் தலைமையின்மீது அன்பும், நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டவர்.

53-265—1a

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

71—

மின்மாற்றிகள்

***667—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி தொகுதி, துலுக்கன்குறிச்சி, பனையடிப்பட்டி போன்ற கிராமப் பகுதிகளில் பழமைவாய்ந்த மின்மாற்றிகளை மாற்றி, புதிய மின்மாற்றிகளைப் பொருத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த துலுக்கன்குறிச்சி மற்றும் பனையடிப்பட்டி கிராமத்திற்கு, வெம்பக்கோட்டை துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும், மேற்படி இரண்டு கிராமங்களிலும் உள்ள மின்மாற்றிகளும் நல்ல நிலைமையில் இருப்பதால், புதுப்பிக்கவோ, வேறு மின்மாற்றியை அமைக்கவோ தேவையில்லை.